**உடுநுவர பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

உடுநுவர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாடு தொடர்பான கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகள் பரகாரம் இந் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காட்டப்படுகின்றன.அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், சமர்பிக்கப்பட வேண்டிய எனது அறிக்கைஉரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கன அடிப்படை பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, 2021திசெம்பர் 31 இல் உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசெயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துகிறேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம்பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்,இவ்வறிக்கையில் 1.6.1 பந்கியின் (அ)அவதானிப்பு தவிர்ந்த,முன்னைய ஆண்டில், என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களினுள்உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டிய 1.2(**ஊ**) பந்தியின் குறிப்பிடப்பட்ட ரூபா 854,950 ஆன தொங்கள் கணக்கில் நிலவிய செலவு மீதியை சரிசெய்து இருக்கவில்லை. | சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | தொங்கள் கணக்கை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 273,025 ஆன மீண்டெழும் செலவினம் வருடத்தில் செலவினம் மற்றும் கடன் கொடுனரின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக கணக்கீடு செய்ய முடியவில்லை என அறிவித்துள்ளது. | சேலவினம் மற்றும் கடன்கொடுனர் மீதிகள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,949,046 ஆன கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | இப் பெறுமதியின் ஒரு பகுதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது | கட்டிட நிர்மாண கிரயத்தை சரயாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உன்மையாகவே ஏற்படாத கடன் கொடுனர் ரூபா 455,000 நதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கையிருப்பு தொகையானதுடன், கடன்படுனர் மற்றும் கடன்கொடுனரின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | கடன்கொடுனர்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாணடு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 658,800 ஆன முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டண வருமானம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சுபை தீர்மானம் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டண வருமானதம்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் விளம்பர பலகைக்காக அறவிட வேண்டிய ரூபா 672,000 ஆன வருமானம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கு வைத்தல் கைவிடப்பட்டுள்ளதுடன்,நிலுவை தொகையை அறவிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவித்தல் பலகை வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | சுபையின் நிதியத்தை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 1,071,315 ஆன 07 கைத்தொழில்களை மேற்கொள்ளாது மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுனராக காட்டப்பட்டிருந்தது. | முடிவுறுத்திய வேலைக்காக பட்டியல் வழங்கப்படாமை, உடன்படிக்கை மாத்திரம் தயாரித்தமை போன்ற விடயங்கள் மீது கடன்கொடுனராக காட்டப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கறில் காட்டப்பட்டுள்ள கடன்கொடுனர் மீதியை சரியாக இனங்காண வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 10 கணக்கு விடயங்களிற்குரியதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளில் மீதிகள் இடையில் ரூபா 26,382,375 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | துணை பதிவேடுகளை பரிசோதித்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரியான பெறுமானத்தை கணக்குகளில் செம்மையாக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 777,089 ஆன 03 சொத்து விடயங்களுக்காக மதிப்பீட்டறிக்கைமற்றும் ஏனைய அட்டவணைகள் சமர்பிக்காததனால், கணக்காய்வின் போது திருப்பதிகரமா ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | ஏதிர் காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்கு மீதிகளை உறதி செய்துக்கொள்ள தேவையான அட்டவணைகள் சரியாக பேணப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | 2015 ஆண்டினுள் 05 சந்தர்ப்பங்களில் அலுவலர்களுக்கு வழங்கியிருந்தரூபா 89,142 ஆன உப கட்டுநிதி மீளாய்வாண்டு இறதிவரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அலுவலர்களுக்கு எழுத்து மூலமா அறிவித்துள்ளதுடன், அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | மீளாய்வாண்டு இறுதியில் காலாவதியாகியுள்ள 1994 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை 142 சந்தர்ப்பங்களில், வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 743,445 அன பல்வேறு வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீள் பரிசோதித்து நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 41,643,798 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம்ரூபா 21,313,313 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி**<br>2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் வீதவரி வருமானம் சேகரித்தலின் போது,நிதி மோசடியொன்று இடம்பெற்றிருந்ததுடன்,அந்நிதி மோசடி தொடர்பானமேலும் களத்தினுள் தகவல்கள்வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனையின் போது ரூபா 1,028,451 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று அறவிட வேண்டியதாக முடிவு செய்து,''அறவிட வேண்டிய வீதவரி மோசடி கணக்கு'' எனும் புதிய கணக்கு மீதியொன்று 2018 கணக்காண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.2018 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரையும் 04 வருடங்களுக்கு அதிகமான காலமொன்று கடந்திருந்ததுடன், இவ் வீதவரி தொகையை அறவிடப்பட்டிருக்காததுடன்,அதன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 32,120,181 ஆன நிலுவை வீதவரி மீதியின் சரியானதன்மை தொடர்பாக கணக்காய்வின் பொது திருப்தியடைய முடியாமலிருந்தது. அவ்வாறே, அம் மீதினுள் ஒரு அலகில் நிலுவை ரூபா 10,000 விஞ்சிய 521 ஆதனங்களுக்குரிதாக அறவிட வேண்டிய ரூபா 8,343,921 ஆன நிலுவை வீதவரி உள்ளடங்கப்பட்டிருந்தது. | வீதவரி தரவு தொகுதி மற்றும் கணக்கு சரிசெய்யப்பட்டுள்ளன. | வீதவரி மோசடியாக குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அறவிடுவதற்கு மற்றும் நிலுவை வீதவரி அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | **ஏனைய வருமானம்** | | |
| (i) | **விளம்பர பலகை கட்டணம்**<br>மீளாய்வாண்டு இறுதியில் சபை அதிகார எல்லையில் இஸ்தாபித்திருந்த 400 விளப்பலகைகள் தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 672,000 அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் ஒரு பலயைின் நிலுவை ரூபா 10,000 இற்கு அதிகமான 13 பலகைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 198,400 உள்ளடங்கியிருந்தது. | நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமையின் மீது கொடுப்பனவு தாமதித்ததுள்ளதாக மற்றும் விரைவில் அறவிட வருமான பரிசோதகர்கள் அறிவூட்டப்பட்டனர். | நிலுவை அறிவித்தல் பலகை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

(ii) முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 658,000 ஆன முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய தொற்று நிலைமையின் மீது கொடுப்பனவு மற்றும் அறவீடு தாமதித்துள்ளது. | நிலுவை முச்சக்கரவண்டி அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

## 2.3 மிகைக் அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| பிரதேச சபைசட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டின் போது,ரூபா 1,161,311 பெறுமதியான 02 மிகை அறவீடுகள் விதிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் மேலும் அவற்றிலிருந்து ரூபா 1,085,636 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்தது. | மேன்முறையீட்டு பரிசோதனை பெறுபேறுகள் கிடைக்காததால் அறவீடு தாமதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது . | மிகை அறவீட்டுசான்றிதழ் பிரகாரம் குறித்த தொகையை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையின் களஞ்சியத்தில் ரூபா 361,398 ஆன 2081 குழாய் கிணறு உதிரிப்பாக விடய இருப்பொன்று 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலமொன்றாக விளைவற்று நிலவியது. | 2022 ஆண்டில் பண்டக கணிப்பீட்டிக்கு சமர்ப்பித்து தேவையான முன் நடவடிக்கைகள் எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | களஞ்சிய உதிரிபாகங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ஊழியர் கடன் | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாத்தின் 4:2:4 பிரிவின் பிரகாரம் ஓய்வு பெற்ற, வேலை தடை செய்த மற்றும் மரணித்த 10 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய | தகவல்களை கண்டறிந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு அறவிட வேண்டிய ஊழியர் கடனை அறவிட வேண்டும். |

ரூபா 116,303 ஆன ஊழியர் கடன் ஓராண்டிற்கும் அதிக காலமாக அறவீடு நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களிற்கான சம்பள கொடுப்பனவு பரசோதனை

| | | |
|---|---|---|
| 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்திற்காக 1998 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொண்ட திருத்தங்கள் உள்ளடங்கிய கூட்டிணைந்த வெளியீட்டின் 10(1)(2) பிரிவு பிரகாரம், மற்றும் 1980 இன் 46 இலக்க ஊழயிர் நம்பிக்கை பொறுப்பு சட்டத்தின் இரண்டாம் பகுதியின் 16(1) பிரிவு பிரகாரம், 2020 மார்ச் மாதம் முதல் 2021 நவம்பர் மாதம் வரையான காலத்திற்குரிய ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களிற்காக செலுத்த வேண்டிய ரூபா 815,489 பங்களிப்புத் தொகையை செலுத்தியிருக்கவில்லை. | நாட்சம்பள அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதால், பங்களிப்புத் தொகை செலுத்தவில்லையென மற்றும் எதிர்காலத்தில் சரிசெயய் நடவடிக்கை எடுக்கிறேன். | உரிய சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டும் |

## 3.3 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய ரூபா 5,289,600 ஆன பயன்படுத்த முடியாத 08 வாகனங்களை 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பராதீனம் செய்திருக்கவில்லை. | திருத்த மற்றும் பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கை இடம் பெறுவதாக. | பராதீனம் செய்ய வேண்டிய வாகனங்களை பராதீனம் செய்ய வேண்டும். |